www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V6M

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 6

கணிதம்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 30

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 4×1=4

1) இரட்டை எண்களில் ஒரே பகா எண்
a) 4 b) 6 c) 2 d) 0

2) 8, 9 மற்றும் 12 ஆகிய எண்களால் வகுபடும் மிகப்பெரிய 4 இலக்க எண் என்ன?
a) 9999 b) 9996 c) 9696 d) 9936

3) 3 வாரங்கள் = _____ நாள்கள்.
a) 21 b) 7 c) 14 d) 28

4) இலாபமும் இல்லை, நட்டமும் இல்லை எனில்,
a) அடக்கவிலை = விற்பனை விலை b) அடக்கவிலை > விற்பனை விலை
c) அடக்கவிலை < விற்பனை விலை d) குறித்தவிலை = தள்ளுபடி

II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 3×1=3

5) 11 மற்றும் 60 ஆகிய எண்களுக்கு இடையே உள்ள பகா எண்களின் எண்ணிக்கை _____ ஆகும்.

6) 50 கி.கி ÷ 100கி = _____

7) தள்ளுபடி = குறித்தவிலை − _____

III. சரியா / தவறா எனக் கூறுக: 3×1=3

8) 57 மற்றும் 69 ஆகியவை சார்பகா எண்கள்.

9) மீனா 250 மி.லி மோர் வாங்கினாள். அது 2.50 லி-க்குச் சமம்.

10) ஒவ்வோர் இயல் எண்ணும் பகா எண்ணாகவோ அல்லது பகு எண்ணாகவோ இருக்கும்.

IV. ஏதேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளி: 4×2=8

11) மிகச்சிறிய மற்றும் மிகப்பெரிய ஈரிலக்கப் பகா எண்களை எழுதுக.

12) 14, 42 என்ற எண்களுக்குப் பகாக் காரணிப்படுத்துதல் முறையில் மீ.சி.ம-வைக் காண்க.

13) தமிழகத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 998 மி.மீ. இதனைச் சென்டி மீட்டரில் மாற்றுக.

14) கீழ்க்கண்டவற்றை 12 மணி நேர அமைப்புக்கு மாற்றுக:
(i) 0.2:00 மணி (ii) 21:10 மணி

15) ஒரு மேசையானது ₹ 4,500 இக்கு வாங்கப்பட்டு ₹ 4,800 இக்கு விற்கப்படுகிறது, எனில் இலாபம் அல்லது நட்டம் காண்க.

16) முத்து ஒரு மகிழுந்து வண்டியை ₹ 8,50,000 இக்கு வாங்கினார். அதை ₹ 25,000 இலாபத்திற்கு விற்பனை செய்ய விரும்பினார் எனில் மகிழுந்தின் விற்பனை விலை என்னவாக இருக்கும்?

V. ஏதேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளி: 4×3=12

17) இரு எண்களில் மீ.சி.ம. 432 மற்றும் அவற்றின் மீ.பெ.கா. 36. ஓர் எண் 108 எனில், மற்றோர் எண் என்ன?

18) வகுபடும் தன்மை விதியினை பயன்படுத்தி கொடுக்கப்பட்ட எண்கள் வகுபடும் எனில் 'ஆம்' மற்றும் வகுபடவில்லை எனில் 'இல்லை' எனக் குறிக்கவும்.

எண்கள்	÷2	÷3	÷4	÷5	÷6	÷8	÷9	÷10	÷11
99									
1260									
300									

19) கீதா 2லி 250 மிலி கொள்ளளவு கொண்ட தண்ணீர்க் குடுவையைக் கொண்டு வந்தாள். அதிலிருந்து அவருடைய நண்பர்கள் 300 மி.லி. தண்ணீர் குடித்து விட்டனர். குடுவையில் உள்ள மீதித் தண்ணீரின் அளவு எவ்வளவு?

20) ஒரு செயற்கைக்கோள் 7 மணி 16 நிமிடங்கள் 20 வினாடிகளில் தன்னுடைய சுற்றுவட்டப் பாதையை அடைகிறது. இதனை வினாடிகளில் கணக்கிடுக.

21) 2020 ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசு தினத்திற்கும், கல்வி வளர்ச்சி நாளுக்கும் இடையில் உள்ள நாள்களைக் கணக்கிடுக.

22) ஒருவர் ₹ 300 இக்கு 75 மாம்பழங்கள் வாங்கி அவற்றில் 50 மாம்பழங்களை ₹ 300 இக்கு விற்பனை செய்தார். அனைத்து மாம்பழங்களும் விற்பனையான பின் அவரது இலாபம் அல்லது நட்டம் காண்க.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com